**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2025– ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09–ம் நாள் வியாழன்கிழமை**

**IA No.16/2025**
**in**
**IA 4/2022**
**in**
**OS no.221/2019**
**–––**

இந்திரா ......மனுதாரர்/வாதி

**/எதிர்/**

ஜெயா ஹச்சர் .....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 25.09.2025–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.குருதாஸ் அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

தாவா அசல் வழக்குடன் மனுவில் கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டது என்றும், எனவே உத்தரவுக்காக போடப்பட்டுள்ள இடைநிலை மனு எண்.4/2022ஐ மறுதிறப்பு செய்து, தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்ய ஏதுவாக மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் இந்த நிர் மனுவை உத்தரவுக்காக வாய்தா ஏற்பட்டிருந்த ஐ.ஏ.4/2022 மனுவை மறுதிறப்பு செய்து ஆவணங்களை ஏற்க செய்யவேண்டுமாய் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் கட்டளை 12 விதி 14 மற்றும் கட்டளை 11 விதி 6 சிபிசி ன்கீழ் எதிர்மனுதாரர்/எதிர்வாதியை அசல் ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டுமாய் தாக்கல் செய்தததாகவும், மேற்படி ஐ.ஏ.4/2022 மனுவும் கடந்த 26.04.2022ம் தேதியில் அனுமதிக்கப்பட்டு அந்த உத்தரவிற்கு எதிராக எதிர்மனுதாரர்/எதிர்வாதி மாண்பமை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்ததாகவும், அதில் ஏற்பட்ட உத்தரவின் அடிப்படையில் மேற்படி ஐ.ஏ.4/2022 மனு கடந்த 04.01.2023ம் தேதி மீண்டும் கோப்புக்கு எடுக்கப்பட்டு, மீண்டும் மேற்படி மனு விசாரணைக்கு போடப்பட்டு இருதரப்பு வாதங்களும் நிறைவுப்பெற்றதாகவும், விசாரணை தேதியில் அசல் ஆவணங்கள் எதிர்மனுதாரர்/எதிர்வாதியிடம் இல்லையென தெரிவித்துள்ள எதிர்மனுதாரரின் கூற்று தவறு என நிரூபிக்கக்கூடிய 2 முக்கிய ஆவணங்கள் தனது வழக்கறிஞர் வசம் இல்லாமல் போய்விட்டது என்றும், எதிர்மனுதாரர்/எதிர்வாதிக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட கிரையப்பத்திரத்தின் பக்கம் 6ல் கிரையம் கொடுத்தவர் முந்தைய மூல ஆவணங்களை இந்த

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.09 18:52:32 +0530

எதிர்மனுதாரர்/எதிர்வாதியிடம் ஒப்படைத்துவிட்டதாக தெரிவித்துள்ளதாகவும், மேற்படி எதிர்மனுதாரர்/பிரதிவாதி கிரையம் வாங்கிய கிரையப்பத்திரமும் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் 12 ஆக அ.வ.எண்.111/2017ல் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்/எதிர்வாதியை தாக்கல் செய்யவேண்டுமாய் சொல்லியுள்ள அசல் ஆவணங்கள் எதிர்மனுதாரர்/எதிர்வாதியிடம் இல்லையென்ற கூற்று தவறு என்பதை நிரூபிக்க மேற்படி எதிர்மனுதாரர் கிரையம் வாங்கிய கிரையப்பத்திரம் ஐ.ஏ.4/2022 மனுவில் தாக்கல் செய்யவேண்டியது அவசியமென்றும், மாண்பமை மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் கடந்த 03.08.2022ம் தேதி சீராய்வு மனு எண்.CRP(PD)(MD) No.1593/2022ல் ஏற்பட்ட உத்தரவில் அசல் ஆவணங்கள் தேவையில்லையென மாண்பமை உயர்நீதிமன்றம் தெரிவிக்கவில்லை என்றும், மாண்பமை உயர்நீதிமன்றம் எதிர்மனுதாரர்/எதிர்வாதி தனது எதிருரையில் அசல் ஆவணங்கள் தன் வசம் இல்லையென தெரிவிக்கவில்லை என்று சொல்லியுள்ளதாகவும், மாண்பமை உயர்நீதிமன்றம் தனது உத்தரவில் கீழ்கண்டவாறு சொல்லியுள்ளது என தெரிவித்துள்ளார்

".........When it is the specific case of the petitioner that the documents are not available with him, he has not pleaded so in the counter affidavit as well as before the court while deciding this application. Therefore, the trial court has passed the above order..........."

எனவே மாண்பமை உயர்நீதிமன்றம் எதிர்மனுதாரரை கூடுதல் எதிருரை தாக்கல் செய்ய உத்தரவிட்டதாகவும் அதில் எதிர்மனுதாரர்/எதிர்வாதி மேற்படி அசல் ஆவணங்கள் தன் வசம் இல்லையென கட்சி செய்திருக்கவேண்டுமென்றும், மாண்பமை உயர்நீதிமன்றம் தனது உத்தரவில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளதாகவும்

"...........The petitioner/defendant is at liberty to file an additional counter affidavit. The trial court shall dispose of IA No.4 of 2022 in OS No.221 of 2019 afresh, based on the specific stand taken by the petitioner/defendant......"

ஆனால் எதிர்மனுதாரர்/எதிர்வாதி தனது கூடுதல் எதிருரையில் தன்னிடம் அசல் ஆவணங்கள் இல்லையென தெரிவிக்கவில்லையென்றும், வெறுமனே மேற்படி தாவா சொத்திற்கான அசல் மூல ஆவணங்களை வாங்கினாரா என தனக்கு ஞாபகமில்லை என தெரிவித்துள்ளதாகவும், எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்த கிரையத்தாரரின் அதிகாரம் பெற்ற முகவர் தன்னிடம் அசல் ஆவணங்களை கொடுத்தாரா என்பதை உறுதி செய்யவில்லை என்றும், மாண்பமை உயர்நீதிமன்றத்தில் தன்னிடம் அசல் ஆவணங்கள் இல்லையென தெரிவித்தவர் தற்போது சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி அசல் ஆவணங்களை பெற்றாரா இல்லையா என அவருக்கு ஞாபகமில்லை என தெரிவித்துள்ளதாகவும், முதலில் எதிர்மனுதாரர் அசல் ஆவணங்களை பெற்றாரா இல்லையா என்பதை உறுதி செய்துவிட்டு அது சம்மந்தமாக கூடுதல் எதிருரை தாக்கல் செய்யவேண்டுமென்றும், மாண்பமை உயர்நீதிமன்றம் அசல் ஆவணங்களின் தேவை மற்றும் முக்கியதுவத்தை குறித்து தனது உத்தரவில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளதாகவும்

"......In the interest of justice, the trial court shall also find out the possibility of calling for the original documents from revenue department, by invoking rule 75 of Civil Rules of Practice..............."

எனவே மாண்பமை உயர்நீதிமன்றம் எதிர்மனுதாரர்/எதிர்வாதியை அசல் ஆவணங்களை தாக்கல் செய்யவேண்டுமாய் அறிவுறுத்தியுள்ளதாகவும் அல்லது இந்நீதிமன்றம் அசல் ஆவணங்களை பெற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளதாகவும், எனவே மேற்படி 2 ஆவணங்களும் ஐ.ஏ.4/2022 மனுவிற்கு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.09 18:52:38 +0530

அவசியமானது என்றும், எனவே இரண்டு மனுக்களை தற்போது தாக்கல் செய்துள்ளதாகவும் அதில் ஒன்று IA No.4/2022 in OS No.221/2019 மனுவை மறுதிறப்பு செய்து ஆவணங்களை தாக்கல் செய்து மீண்டும் விசாரணை செய்யக்கோரியும் மற்றொரு மனுவை மேற்படி 2 ஆவணங்களையும் இந்நீதிமன்றம் பெற்றுக்கொள்ள உத்தரவிடவேண்டுமாய் தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் ஒரு ஆவணம் கடந்த 18.04.1994ம் தேதி எதிர்மனுதாரர்/எதிர்வாதி கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் என்றும், மற்றொரு ஆவணம் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் ஏற்பட்ட உத்தரவில் பதிவிறக்க நகல் என்றும் தெரிவித்துள்ளது. மேற்படி 2 ஆவணங்களை விசாரணை காலத்தில் தாக்கல் செய்யாமல் விடுப்பட்டது தனது வழக்கறிஞரின் தவறினால் ஏற்பட்டது என்றும், அது வேண்டுமென்றே அலட்சியமாக ஏற்பட்டதில்லை என்றும், இம்மனுவில் தெரிவித்துள்ள 2 ஆவணங்களும் எதிருரை தாக்கல் செய்த சமயத்தில் கிடைக்கப்பெறவில்லை என்றும், வழக்கு தாக்கல் செய்த பின்னீடு தான் மனுவில் கண்ட ஆவணத்தின் விபரங்கள் தனக்கு தெரியவந்ததாகவும், எனவே தாவா அசல் வழக்குடன் மனுவில் கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டது என்றும், எனவே உத்தரவுக்காக போடப்பட்டுள்ள இடைநிலை மனு எண்.4/2022ஐ மறுதிறப்பு செய்து, தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்ய ஏதுவாக மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிருரை சுருக்கம்:–</u>

தாவா மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானதாகவும், முரண்பாடானதாகவும் என்றும், தாவா சொத்தானது கடந்த 12.10.1960ம் தேதியன்று ஆவண எண்.2775/1960ன்படி ஊர்க்காவலன் என்பவர் காளியம்மாள் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றும், மீண்டும் தாவா சொத்தானது கடந்த 27.06.1966ம் தேதியன்று ஆவண எண்.847/1966ன்படி நில உரிமையாளர் காளியம்மாள் என்பவர் ஆத்தித்தனார் கல்வி நிறுவனத்திற்கு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலமாக கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆவண எண்கள் 2775/1960 மற்றும் 847/1966 ஆகியவற்றின் அசல் ஆவணங்களை தாக்கல் செய் சொல்லி இடைநிலை மனு IA No.4 of 2022 தாக்கல் செய்யப்பட்டது என்றும், அசல் வழக்கான OS No.221 of 2019ல் IA No.4 of 2022 என்ற இடைக்கால மனுவில் இம்மாண்புமிகு விசாரணை நீதிமன்ற பிறப்பித்த உத்தரவினை எதிர்த்து எதிர்மனுதாரர்/பிரதிவாதியாகிய தன்னால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு CRP(PD)(MD) No.1593 of 2022ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழங்கிய உத்தரவின் அடிப்படையில் மேற்படி மனுவில் steps எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதியால் IA No.14 of 2024ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் கடந்த 06.06.2025ம் தேதியன்று மேற்படி இடைக்கால மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், கடந்த 01.09.2025ம் தேதியன்று IA No.4 of 2022ல் இருதரப்பு வாதங்களும் கேட்டு முடிக்கப்பட்டு உத்தரவிற்காக கடந்த 08.09.2025ம் தேதியன்று மாண்புமிகு நீதிமன்றத்தால் வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், கடந்த 01.09.2025ம் தேதியன்று இருதரப்பு வாதங்களும் மனுதாரர்/வாதி தற்போது தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியுள்ள இரண்டு ஆவணங்களின் அடிப்படையிலேயே நடைபெற்றது என்றும், மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவில் தான் கடந்த 18.04.1994ம் தேதியன்று கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலை நீதிமன்றத்தில் குறியீடு செய்யவேண்டுமென்று கூறியுள்ளதாகவும்,

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.10.09 18:52:43 +0530

மேற்படி சான்றிட்ட நகல் OS No.111/2017 வழக்கில் Ex.R12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று மனுவில் கூறப்பட்டுள்ளதாகவும், ஆனால் மேற்படி ஆவணம் OS No.111/2017 என்ற அசல் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அதன் IA No.366/2017 என்ற இடைக்கால மனுவில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் ஆகும் என்றும், மேற்படி வழக்கானது தற்போது மாண்புமிகு நீதிமன்றத்தில் OS No.84/2019 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நீதிமன்றத்தில் தாக்கலாகி நிலுவையில் உள்ள IA No.4/2022 மனுவில் தாக்கல் செய்ய கோரியுள்ள ஆவணங்களான ஆவண எண்கள் 2775/1960 மற்றும் 847/1966 ஆகியவற்றின் அசல் ஆவணங்கள் அப்போதிருந்தே தன்னிடம் இல்லாத காரணத்தினால் தான் OS No.111/2017 ன் IA No.366/2017 என்ற வழக்கில் சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்து பெறப்பட்ட சான்றிட்ட நகலையே Ex.R1 மற்றும் R2 ஆக குறியீடு செய்ததாகவும், மனுவில் இரண்டாவது ஆவணமாக குறியீடு செய்யக்கோரும் ஆவணமானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் C.R.P.(PD)(MD)No.1593 of 2022 on 03.08.2022ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட web copy ஆகும் என்றும், மேற்படி உத்தரவின் நகல் கனம் நீதிமன்றத்திற்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் இருந்து ஏற்கனவே அனுப்பப்பட்டும், தன்னால் இம்மாண்புமிகு நீதிமன்றத்தில் IA No.4 of 2022 என்ற மனுவில் தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் உள்ளது என்றும், அவ்வாறிருக்க மனுதாரர்/வாதி இவ்வழக்கை காலதாமதப்படுத்தி இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இடைக்கால மனுக்களை தாக்கல் செய்துள்ளதாகவும், இடைக்கால மனுவை சுமார் 3 ஆண்டு காலமாக முடிக்க விடாமல் மேலும் மேலும் பல இடைக்கால மனுக்களை தாக்கல் செய்து காலதாமதப்படுத்துவது நீதிமன்ற நேரத்தை வீணடிப்பது போன்தாகும் என்றும், மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழங்கிய உத்தரவில் மேற்படி அசல் ஆவணம் தன்னிடம் இல்லை என்பதை தெளிவுபடுத்தியுள்ளது என்றும், மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் " The Trial Court shall dispose of IA No.04 of 2022 in OS No.221 of 2019 afresh, based on the specific stand taken by the petitioner/defendant. In the interest of justice, the trial court shall also find out the possibility of calling for the original documents from of Revenue Department by invoking Rule 75 of Civil Rules of Practice" என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது என்றும், My specific stand in IA No.04 of 2022 is that the original documents are not with me. So, I am not able to produce the above said documents", மனுதாரர்/வாதி அசல் வழக்கினை மேல் நடத்த விரும்பாமல் காலதாமப்படுத்த வேண்டுமென்ற கெட்ட நோக்கத்தோடு பல இடைக்கால மனுக்களை தாக்கல் செய்து வருகின்றதாகவும், எனவே மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

4. இருபுறமும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.10.09 18:52:48 +0530

5. மனுதாரர் தரப்பில் உத்தரவுக்காக போடப்பட்டிருந்த இடைநிலை மனு எண்.4/2022 மனுவை மறுதிறப்பு செய்து இந்த நம்பர் இடைநிலை மனுவில் ஆவண விபரப்பட்டியலில் தெரிவித்துள்ள ஆவணங்களை ஏற்று இடைநிலை மனு எண்.4/2022ல் குறியீடு செய்துக்கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் ஆவணப்பட்டியலில் விவரித்துள்ள 2 ஆவணங்களில் முதலாவது ஆவணமாக இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடந்த 18.04.1994ல் ஆதித்தனார் கல்வி அறக்கட்டளையின் அதிகாரம் பெற்ற முகவர் மூலமாக தாவா சொத்தை கிரையம் வாங்கியதற்கான கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகலை குறியீடு செய்யவேண்டுமாகவும், கடந்த 03.08.2022ம் தேதியிட்ட இடைநிலை மனு எண்.4/2022 மனுவில் கடந்த 26.04.2022ம் தேதி ஏற்பட்ட உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவில் ஏற்பட்ட உத்தரவின் பதிவிறக்க நகலை குறியீடு செய்ய வேண்டுமாகவும் தெரிவித்து மேற்படி 2 ஆவணங்களை ஏற்க வேண்டி இந்த நிர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில் 18.04.1994ம் தேதியிட்ட எதிர்மனுதாரர்/பிரதிவாதி கிரையம் வாங்கிய கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் என தெரிவித்துள்ள நிலையில் அதனை பரிசீலனை செய்கையில், xerox நகல் என்பதை அறிய முடிகிறது. மேற்படி ஆவணத்தில் 6வது பக்கத்தில் இந்த நம்பர் எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்த ஆதித்தனார் கல்வி அறக்கட்டளையின் அதிகாரம் பெற்ற முகவர் முந்தைய மூல ஆவணங்களை இந்த நம்பர் எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடம் ஒப்படைத்ததாக தெரிவித்துள்ளதாக கண்டு எழுதப்பட்டுள்ளதாக சொல்லி மேற்படி ஆவணத்தை உத்தரவுக்காக போடப்பட்டுள்ள இந்நேரத்தில் தாக்கல் செய்து குறியீடு செய்யவேண்டுமாய் கோரப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில் மொத்தம் 17 ஆவணங்கள் இந்த நம்பர் எதிர்மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. மாறாக எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணம் தன் வசம் இல்லை என்பதால் தான் அசல் வழக்கு எண்.111/2017ல் இடைநிலை மனுவில் சான்றிட்ட நகலை குறியீடு செய்ததாகவும், தான் ஆரம்பம் முதலே மேற்படி ஆவணம் தன் வசம் இல்லை என சொல்லி வருவதாகவும், மனுதாரர் தாக்கல் செய்யவேண்டுமாய் தெரிவித்துள்ள ஆவணம் வழக்கில் எவ்வகையிலும் தாக்கத்தை ஏற்படுத்தப்படுத்தப்போவதில்லை என தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. ஆரம்பத்தில் இடைநிலை மனு எண்.4/2022 மனுவை 12.10.1960 மற்றும் 27.06.1966ம் தேதியிட்ட ஆவணங்களை எதிர்மனுதாரரை தாக்கல் செய்யக்கோரி மனு செய்து அதிலும் கடந்த 26.04.2022ம் தேதி உத்தரவு ஏற்பட்டு அதனை எதிர்த்து இந்த நம்பர் எதிர்மனுதாரர் சீராய்வு மனு தாக்கல் செய்து அதில் ஏற்பட்ட உத்தரவின் அடிப்படையில் ஐ.ஏ.4/2022 மனு மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு ஆவணங்களை வருவாய் துறையிலிருந்து வரவழைக்க மனு தாக்கல் செய்து அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டப் பின்னர் மேற்படி ஐ.ஏ.4/2022 மனு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, விசாரணை முடிவுற்று உத்தரவுக்காக போடப்பட்டுள்ள இந்த தருவாயில் மீண்டும் மனுவை மறுதிறப்பு செய்து மேற்கண்ட 2 ஆவணங்களும் எதிர்மனுதாரர் வசம் தான் உள்ளது என்பதை நிரூபிக்க மனுவில் கண்ட ஆவணங்களை தாக்கல் செய்யவேண்டியது அவசியமென சொல்லி தற்போது

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.09 18:52:53 +0530

மேற்கண்ட ஆவணங்களை இந்த நிர் மனுவுடன் reopen செய்ய தனியாக மனு கொடுத்து மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி முதலாவது ஆவணத்தை பரிசீலனை செய்கையில் 27.06.1966 தேதியட்ட ஆவணம் கொடுக்கப்பட்டதாக கண்டுள்ளது. ஆனால் 12.10.1960ம் தேதியிட்ட ஆவணம் ஒப்படைக்கப்பட்டதாக மேற்படி மனுதாரர் தாக்கல் செய்துள்ள கிரையப்பத்திரத்தில் தெரிவிக்கவில்லை. மேற்படி ஆவணங்களையும் மனுதாரர் முதல் முறையாக இடைநிலை மனு எண்.4/2022 விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போது தாக்கல் செய்யாமல் ஏதோ தனக்கு தற்போது தான் மேற்படி ஆவண விபரம் தெரிய வந்தது போல் தெரிவித்து இந்த நிர் மனுவை ஆவணங்களை ஏற்க வேண்டி தாக்கல் செய்துள்ளார். மற்றொரு ஆவணமான மாண்பமை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பதிவிறக்க நகலும் ஏற்கனவே சமூக நீதிமன்றத்திற்கும் வரப்பெற்று அதன் அடிப்படையில் வருவாய் துறையிலிருந்து ஆவணங்களை வரவழைக்க மனுதாரரை நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும் அதன் பின்னீடு மேற்படி மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவிற்கிணங்க இந்த நிர் மனு மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை முடிவுற்று உத்தரவுக்காக போடப்பட்டிருந்த நிலையில் மேற்படி ஆவணங்களை ஏற்க வேண்டுமாய் தாக்கல் செய்துள்ள இந்த மனு காலம் கடந்து தாக்கல் செய்தது மட்டுமல்லாமல் அசல் வழக்கை மேல்நடத்தவிடாமல் காலம் கடத்தும் நோக்கில் தாக்கல் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரரின் மனு தற்போதைய வழக்கின் சூழ்நிலையில் காலம்கடத்தும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டதாக தெரிய வருகிறது என்ற அடிப்படையில் மனுதாரரின் மனு நிலைநிற்கத்தக்கதல்ல என முடிவு செய்து, மனுதாரரின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் வருடம் அக்டோபர் மாதம் 09-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.09 18:52:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| |
|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

| |
|---|
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.09 18:53:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்